முதலாவது வழித்தடத்தில்

# விமான நிலையம் - கிளாம்பாக்கம் இடையே மெட்ரோ ரெயில் விரிவாக்கம்

## திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தொடக்கம்

சென்னை, நவ.8–

சென்னை விமானநிலையத்தில் இருந்து கிளாம்பாக்கம் இடையே 16 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் விரிவாக்கம் செய்வதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ஓரிரு நாட்களில் தொடங்க இருக்கிறது.

### விமானநிலையம்–கிளாம்பாக்கம்

சென்னையை அடுத்த கூடுவாஞ்சேரியில் புதிய பஸ் முனையம் வரவிருப்பதையொட்டி, பயணிகள் போக்குவரத்து அப்பகுதியில் அதிகம் இருக்க வாய்ப்பு உள்ளது. இதனால் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் முதலாவது வழித்தடமான விமானநிலையத்தில் இருந்து கூடுவாஞ்சேரி அருகில் உள்ள கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரெயில் திட்டத்தை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பான மண் ஆய்வு உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளில் அதிகாரிகள் ஈடுபட்டனர். இதனைதொடர்ந்து விரிவாக்கத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையை எல் ஆண்டு டி நிறுவனம் தயாரித்துள்ளது. தற்போது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான திட்டஅறிக்கை தயாரிக்கும் பணி ஓரிரு நாட்களில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் ஈடுபட உள்ளனர்.

### 3 வெவ்வேறு வழிகளில் ஆய்வு

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

சென்னை விமானநிலையத்தில் இருந்து புதிய பஸ் முனையம் வரவிருக்கும் கூடுவாஞ்சேரியை அடுத்த கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரெயில் திட்டம் நீட்டிக்கப்பட உள்ளது. முதல் கட்ட நீட்டிப்பு பாதை ஜி.எஸ்.டி. சாலையில் 16 கிலோ மீட்டர் நீளத்தில் அமைய இருக்கிறது.

விமான நிலையத்தில் இருந்து ஜி.எஸ்.டி சாலையில் 16 கிலோ மீட்டர் நீளம், ஜி.எஸ்.டி சாலையில் இருந்து தாம்பரம் மற்றும் முடிச்சூர் சாலை வரை 19 கிலோ மீட்டர் நீளம் மற்றும் விமான நிலையம்– கண்டோன்மென்ட் –பல்லாவரம் பஸ் ஸ்டாண்ட் ஜி.எஸ்.டி. சாலையில் இருந்து அஸ்தினாபுரம் மற்றும் தாம்பரம் மேற்கு, முடிச்சூர் சாலை வழியாக கிளாம்பாக்கம் வரை செல்லும் 20 கிலோ மீட்டர் சாலைகள் என 3 வெவ்வேறு வழிகளில் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டன. இதில் முதலாவதாக ஆய்வு செய்யப்பட்ட ஜி.எஸ்.டி. சாலையில் 16 கிலோ மீட்டர் தூரம் கொண்ட சாலை தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

### 13 ரெயில் நிலையங்கள்

சாலையின் மையப்பகுதியில் உயர்த்தப்பட்ட பாதை அமைத்து மெட்ரோ ரெயில் இயக்குவது குறித்து பரிசீலனையில் உள்ளது. அத்துடன் ரெயில் நிலையங்களுக்கு தேவையான இடங்களில் பெருநகர போக்குவரத்து கழகத்துடன் ஒருங்கிணைந்து அவற்றின் நிலங்களை பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

ஒரு ரெயில் நிலையத்திற்கும் மற்றொரு ரெயில் நிலையத்துக்கும் 1.2 கிலோ மீட்டர் தூரத்தில் மொத்தம் 13 ரெயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. தற்போது, இந்த வழியில் 7 புறநகர் ரெயில் நிலையங்கள் உள்ளன. நிலம் கையகப்படுத்தல் மற்றும் தூரம் குறைவாக இருப்பதால் ஜி. எஸ்.டி. சாலையில் மெட்ரோ ரெயில் அமைக்க அதிக ஆர்வம் காட்டப்பட்டு வருகிறது. இந்த திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்தல் விமான நிலையத்திற்கு பிறகு பாதுகாப்பு துறை நிலங்கள், பல்லாவரம் அருகே வணிக நிறுவனங்கள் அமைந்துள்ள தனியார் நிலங்கள் மற்றும் பெருங்களத்தூர் அருகே ரெயில்வே மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் வெளி வளையத்திற்கு அருகிலுள்ள தனியார் நிலங்கள் கையகப்படுத்துவது குறித்து ஆலோசனை நடந்து வருகிறது. புறநகரில் இயக்கப்படும் மின்சார ரெயில்வேக்கு இணையாக மெட்ரோ ரெயிலும் இயங்கும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.